RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# வள்ளுவம் காட்டும் இல்லறப் பண்பாடு

வெ. அமுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சை-613007, தமிழ்நாடு, இந்தியா.

# The Domestic Culture Shown by Valluvar

V. Amutha [a, *]

[a] Department of Tamil, Kundavai Nachiyar Government Women's Arts College, Thanjavur-613007, Tamil Nadu, India

* Corresponding Author: amuthasivakumar72@gmail.com

Received: 26-09-2021
Revised: 01-05-2022
Accepted: 13-05-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Thirukkural, the sweet, living entity of the Tamil man, is divided into three divisions, namely, virtue, wealth, and pleasure, and consists of 133 chapters and 1330 couplets in nine parts. Thirukkural is translated into more than 110 languages. Manakkudavar was the first to write the foreword to this book, which has been translated into the second most widely translated language in the world. Nevertheless, Parimelazhagar's foreword is hailed as the best text. Malaiyatthuvasamakanar Gnanaprakasam published this book in Thanjavur in 1812. Thirukkural has been praised by Leo Tolstoy, Bernard Shaw, G.U. Pope, Veerama Munivar, and many others. Bharathi said that Tamil Nadu has become famous by giving Valluvan to the world, and Bharathidasan praised that this world received fame due to having Valluvan. This article is intended to examine the cultural records found in the chapter on Married Life in Domestic Virtue in such an excellent Thirukkural.

**Keywords:** Thirukkural, Bharathiar, Manakkudavar, Demestic Culture

## முன்னுரை

'பண்பாடு' என்ற நூல் எட்டுத்தொகை பத்துப்பாட்டு மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களில் இடம் பெறவில்லை. திருக்குறளிலும் இடம்பெறவில்லை. "பண்பாடு என்ற சொல் 50 ஆண்டுகளாக மட்டுமே வழக்கில் உள்ளது. 1926-1931-இல் தயாரிக்கப்பட்ட சென்னை பல்கலைக்கழக லெக்சிக்கனில் அச்சொல் இல்லை என்று கார்த்திகேசு சிவத்தம்பி கூறுகிறார். மேலும் அவர் ஆங்கிலத்தில் Culture எனக் குறிப்பிடப் பெறும் சொல்லை கலாச்சாரம் என்று கூறும் மரபு இருந்தது என்கிறார். Culture என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு பண்பாடு என்னும் பதமே பொருத்தமானது என்று மொழிபெர்ப்பு செய்தார். பண் + பாடு = பண்பாடு பண்படுதல் தான் பண்பாடு என்று சுட்டப்படுகிறது. 'பண்பாடு' என்ற சொல்லுக்கு பண்படுவது, சீர்படுவது, திருத்தமாக இருப்பது எனப் பொருள் கொள்ளலாம். பண்பட்ட நிலம் திருந்திய நிலம் அதுபோல பண்பட்ட உள்ளம் திருந்திய உள்ளமாகும் என்பது பாவாணர் கருத்தாகும் சிறந்த கல்வியினால் மட்டுமே உள்ளத்தை பண்படுத்த முடியும் என்கிறவர். பெரியவரும் பண்பாட்டுக்கு அடிப்படையான கூறு கல்வி என்கிறார். மேலும் அவர் கல்வி எண்ணங்களை சிறப்பிக்கிறது. மனதில் உள்ள தீயஎண்ணங்களை அகற்றி மனதை தூய்மைப் படுத்துவதனால் மனம் உயர்ந்து கொண்டு போகிறது. மனதை உயர்த்தி பல கிளைகளாக. கலைகளாக பரிணமிக்க வைக்கிறது. கல்வியினால் கலைகள் உயர்கிறது. அந்த கலைகள்தான் மேலும் வளர்ந்து பண்பாடாக பரிணமிக்கிறது என்கிறார். "சீலம் திருந்திய உணர்ச்சி, ஆசாரம், கல்வி கலை இவையெல்லாம் கூடிப் பண்பாடு என்பது உண்டாகும்" என்பார் இராசாசி" (Iraiyarasan, 1993).

உலகம் முழுவதும் ஒன்றாகிவிட வேண்டும் என்று அன்பாலே பிறப்பதுதான் மிகப்பெரிய பண்பாடு. பண்பாடு என்பது வளர்வது ஆகும். யாதும் ஊரே! யாவரும் கேளீர்! என்ற உயர்ந்த பண்பாடுதான் தமிழர் பாண்பாடு. தமிழை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வெவ்வெறு மதத்தினராக வெவ்வேறு நாட்டினராகக்கூட இருக்கலாம். அவர்கள் அனைவரும் ஒரே பண்பாட்டினை உடையவர்களாகக் கொள்ளப்படுவர்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா

நல்லது செய்தல் ஆற்றிராயினம்

அல்லது செய்தல் ஓம்புமின்" போன்ற பாடல்கள் தமிழ்பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன (Iraiyarasan, 1993).

கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்தோர் பண்பும், பசுவிற்காக மகனை தேர்க்காலில் இட்டுக்கொன்ற மனுநீதிச்சோழன் வரலாறும், அஃறினைக்கும் அன்பு செய்த சிபிசக்கரவர்த்தி மற்றும் பாண்டியன் நெடுஞ்செழியனின் மாண்பும்' புலவர்களின் கல்வியின் சிறப்பும் செம்மைத் தன்மையும் இலக்கியங்கள் வழி வெளிப்படுத்துகின்றன. இத்தகைய சமுதாயத்திலிருந்து தோன்றிய திருக்குறள் பண்பாட்டின் மொத்த அடையாளமாகத் திகழ்கிறது. திருக்குறள் மக்கள் வாழ்க்கையை விளக்குவதனால் மு. வரதராசனார் திருக்குறளுக்கு வாழ்க்கை விளக்கம் என்று சுட்டுகிறார்.

## அறம் விளக்கம்

மனத்துக்கண் மாசிலனாதல் அறம் என்கிறார் வள்ளுவர் செய்யக்கூடாததை செய்யாமல் இருப்பது அறம் செய்ய வேண்டியதை தவறாமல் செய்வது அறம் ஆகும்.

அறம், இல்லறம் துறவறம் என இரு வகைப்படும். இல்லறம், கொடுத்தலும் அளித்தலும் கோடலும், இன்மையும் ஒழுக்கம், புணர்தல், புனர்ந்தோரைப் பேணல் மற்றையவுமாம். துறவறமாவது துறவும் அடக்கமும், தூய்மையும், தவமும், அறவினை யோம்பலும் மறவினை மறுத்தலும் பிறவுமாகும் (வீரசோழியம்).

அறம், இல்லறம், துறவறம் இரண்டுள் எதை முதலில் சொல்வது உயர்ந்ததை முதலில் சொல்லுதல் மரபு, துறவை வள்ளுவர் இரண்டாகப் பிரிக்கிறர் "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தில் முற்றும் துறந்த துறவு பற்றி கூறியுள்ளார். துறவறவியலில் துறவு நோக்கி முயற்சிக்கின்றவர்களை எதிர்காலம் குறித்து முயல்வான் என்று குறிப்பிடுகிறார். நீத்தார் பெருமை முன் சொல்லப்பட்டதால் துறவறவியலுக்கு முன் இல்லறவியலை வைத்துள்ளார். இல்லறத்தில் பயிற்சி இல்லாதவன் துறவு நோக்கி நகர இயலாது என்கிறார். இல்லறவியலின் முதல் அதிகாரமாக இல்வாழ்க்கை அமைந்துள்ளது.

இல்லத்திலிருந்து தொடங்கும் அறமே இல்லறமாகும். அறம் செய்வதற்காகவே கணவன் என்ற ஆணையும், மனைவி என்ற பெண்ணையும் இயற்கை இணைத்திருக்கிறது. 'திருவள்ளுவர் அறத்தை அறிவுறுத்தவே திருக்குறளை யாத்தனர் என்பது அவர்தம் மொழிகளை ஆராய்வோருக்கு நன்கு விளங்கும். பொருளும், இன்பமும், திருவள்ளுவரால் ஏன் அருளிச் செய்யப்பட்டன என்னும் ஐயம் இங்கே சிலரிடை நிகழலாம். அறத்தின் ஆக்கத்திற்குப் பொருளும் இன்பமும் இன்றியமையாதனவாதலால் திருவள்ளுவர் அறத்தோடு பொருளையும், இன்பத்தையும் சேர்த்து அருளலாயினர் என்று சொல்லலாம். அறம் தனித்தும் பொருளிலும், இன்பத்திலும் விரவியும் இயங்கும் தன்மை வாய்ந்தது. அறமற்ற பொருள் பொருளாகாது இன்பமும் இன்பமாகாது. பொருளுக்கும் இன்பத்துக்கும் அறக்கலப்புத் தேவை. அறத்தில் நின்று அறவழியில் பொருளீட்டி அறவழியில் இன்பம் நுகர்வோர் அறநிலை எய்தல் ஒருதலை. அறம், பொருள், இன்பம் மூன்றையும் ஆராய்ச்சிக்கண்கொண்டு ஒருங்கே நோக்கினால் அவைகளிலெல்லாம் அறமணமே கமழ்தலை உணர்தல் கூடும் ஆகவே திருவள்ளுவர் நூலை அறநூல் என்று கூறுதல் மிகையாகாது'.

தனிமனித வாழ்க்கையை நான்கு பருவங்களாக பகுப்பர். அவை (i)கற்கும் பருவம் (பிரம்மச்சர்யம்) (ii). இல்லறப்பருவம் (கிரகஸ்தம்) (iii). ஓயும் பருவம் (வானப்பிரஸ்தம்) (iv). துறவுப்பருவம்(சந்நியாசம்) என்பனவாகும்.

நான்கு பருவங்களுக்கும் திருவள்ளுவர் இரண்டு இயல்கள் அமைத்துள்ளார். கற்கும் பருவம் (பிரம்மச்சர்யம்) இல்லறத்தின் ஆயத்த நிலை என்பதாலும். ஓயும் பருவம் (வானபிரஸ்தம்) துறவறத்தின் ஆயத்தநிலை என்பதாலும் இரண்டையுமே இல்லறவியல், துறவறவியல் ஆகிய இயல்களுக்குள் வைத்து பாடியுள்ளார்.

## இல்வாழ்க்கை

வாழ்க்கைக்கு திருக்குறள் ஆதாரம். வாழக்கை பயனுள்ளதாக அமைய வேண்டும். அதற்கு வாழ்க்கை விளக்க நூல் என்று போற்றப்படும் திருக்குறள் நமக்கெல்லாம் வழிகாட்டுகிறது. பாரதியாரும் தன்னுடைய கவிதையில்,

"தேடிச்சோறு நிதம்தின்று - பல

சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்

வாடித்துன்பம் மிக உழன்று - பிறர்

வாடப்பல செயல்கள் செய்து - நரை

கூடிக்கிழப்பருவமெய்தி - கொடுங்

கூற்றுக்கிரையெனப்பின்மாயும் - பல

வேடிக்கை மனிதரைப்போல - நான்

வீழ்வேன் என்று நினைத்தாயோ"

என்று வாழ்க்கையின்அர்த்தங்களைப் புலப்படுத்துகிறார் (Bharathiyar, 1992).

ஒருவன் இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு குறித்து இல்வாழ்க்கை அதிகாரம் விளக்குகிறது. பண்டைய தமிழர்கள் இல்லறவாழ்க்கையில் அறத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

## இல்வாழ்வான் கடமைகள்

இல்வாழ்வான் கடமைகளாக திருவள்ளுவர் 11 கடமைகளைச் சுட்டுகிறார் அதிகாரத்தின் முதல் குறட்பாவில் முதல் மூன்று கடமைகளை எடுத்துரைக்கிறார்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை"

இல்லறத்தான் என்பவன் அற இயல்பினை உடைய கற்கும் பருவத்தினருக்கும், ஓயும் பருவத்தினருக்கும், துறவிகளுக்கும் உணவும், மருந்தும், கொடுத்து உதவுவதை கடமையாகக் கூறுகிறார் (Kalyanasundaranar, 2012). திருமுருகாற்றுப்படையில் அந்தணனுக்கு படிக்கும் வயது 48 என்று நக்கீரர் கூறுகிறார். குருவிடம் சென்று புலனடக்கம் இருக்கும் வரை படிக்க வேண்டும். கற்றலும் விரதம் காத்தலும் பிரம்மச்சர்யனுக்கு உரியவை. இவை இரண்டிற்காகவும் இல்லறத்தான் பிரம்மச்சர்யனான மாணவனுக்கு துணை செய்ய வேண்டும். தன்னுடைய பிள்ளை என்று மட்டுமல்லாமல் யார் படிக்க விருப்பம் கொண்டாலும் படிக்கவைக்க வேண்டும். படிக்க வைக்கும் போது ஒழுக்க நெறிக்கான கட்டுப்பாடுகளையும் விதிக்க வேண்டும் "ஓதலும் தூதும் உயர்ந்தோர்மேன" கல்வி கற்கும் பிரம்மச்சர்யம் என்பது அந்தணர் அரசர் வணிகர் ஆகியோருக்கு இருந்துள்ளதை

அறியமுடிகிறது (Subash Chandra Bose, 2016). தற்பொழுது அனைவருக்கும் கல்வி என்ற நிலையை அடைந்திருக்கிறோம்.

ஓயும் பருவம் என்பது. இல்லறக் கடமைகளை நிறைவேற்றிய நிலையில் தன்மகனும், மருமகளும் இல்லறக் கடமைகளை ஏற்றவுடன் அவர்களுக்கு அறிவுரை கூறி காடுநோக்கி மனைவியுடன் சென்று வாழ்வது ஆகும். இந்த கடமையைச் செய்வதற்கு இல்லறத்தான் உதவவேண்டும். கானகத்தில் அக்னி வளர்த்து தவம் மேற்கொள்வர்.

அந்தக் கடமையை முற்றும் துறவு நிலை அடையும் வரை செய்யவேண்டும். தேவர்களுக்கும் மனிதனுக்கும் இறைவன் ஒரு தொடர்பை ஏற்படுத்தியிருக்கிறார். தேவர்களுக்கு வேண்டியதை யாகங்கள் மூலம் நாம் கொடுக்க வேண்டும். அக்னி தேவன் வருணதேவன் போன்றோர் நமக்கு உதவுகிறார்கள். அதன் காரணமாக அந்த காலத்தில் அக்னிவளர்த்தலை எல்லா இல்லங்களிலும் ஒரு கடமையாக மேற்கொண்டனர். அக்னிக்கு ஒரு சிறப்பு உண்டு அதனுள் கிருமிகள் நிற்காது. எல்லாவற்றையும் அது சுத்தம். செய்யும் அக்னி வளர்த்து அதனுள் தேவர்களை நினைத்து அவிர்பாகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று போட்டு வழிபடுவதாகும்.

போபாலில் ஒரு முறை விஷவாயு தாக்கியது. அதனால் பலர் இறந்துவிட்டனர். ஒரு கிராமத்தில் மட்டும் விஷவாயு தாக்கவில்லை அதற்கு காரணம். ஒவ்வொரு நாளும் வீடுகளில் அக்னிஹோமம் வளர்த்தபடியால் அந்த வீடுகளில் விஷவாயு தாக்கவில்லை என்று கூறப்பட்டது. முற்றும் துறந்த துறவியையும் பாதுகாக்க வேண்டும் அம்மூவருக்கும் பசி, நோய், குளிர் நீங்கவும் மருந்தும் உறையுளும் வழங்க வேண்டும்.

அடுத்த மூன்று கடமைகளை அடுத்த குறளில் கூறுகிறார்.

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை"

துறந்தார் என்பது (துறவிகளை அல்ல) காக்கப்பட வேண்டியவர்களால் துறக்கப்பட்டவர்கள், முயற்சியில்லாமலும் முயற்சி இருந்தும் ஊழ்காரணமாக வறுமையுற்றவர்கள், எங்கிருந்தோவந்து நம் வீட்டின் முன்னே அனாதையாக இறந்தவர்களும் ஆகிய மூவருக்கும் கடமையாற்ற வேண்டும். வறுமயுற்றவர்களுக்கு உதவும் நோக்கத்தில் அனைத்து மதங்களிலும் கடமையாற்றுவதைக் காணமுடியும் இஸ்லாமியர்கள் ஆண்டு வருமானத்தில்ஆறில் ஒரு பங்கை பகிர்ந்தளிப்பதை ஈகைத் திருநாள் என்றே கொண்டாடுகிறார்கள் (Kalyanasundaranar, 2012).

மூன்றாவது திருக்குறளில் மேலும் ஐந்து கடமைகளைக் கூறுகிறார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல்தலை"

தென்புலத்தார் யாவர் என்பதற்கு இலங்கை ஜெயராஜ் பரிமேலழகர் உரையை பின்வருமாறு விளக்குகிறார் (Kalyanasundaranar, 2012).

தென்புலத்தார் என்பவர்கள் தென்திசையை இடமாகக் கொண்டவர்கள். பிரம்ம தேவர் சிலரை படைத்து தன்னை வழிபடுமாறு கூறினார். அவர்கள் அதனை ஏற்கவில்லை. அதனால் பிரம்மதேவன் அவர்களை சபித்துவிட்டார். பிரம்மனிடம் அவர்கள் சாபவிமோசனம் வேண்டினர். பிரம்மன் தன் புத்திரர்களிடம் வேண்டுமாறு கூறனார். பிரம்ம புத்திரர்களிடம் வேண்ட சாபம் நீக்கி தென்திசையிலிருந்து வம்சமாக வருபவர்களுக்கு காவலாக இருக்கச்சொன்னார்கள். ஒவ்வொருவரும் அவரவர் மூதாதையர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வதை தென்புலத்தார் கடமை என்று சொல்லப்படுகிறது. இன்று உயர்வான நிலையில் நாம் இருக்கிறோம் என்றால் அதற்கு காரணம் மூதாதையர்கள்தான் என்ற நன்றிக்கடனாகவும் கொள்ளலாம். அவ்வாறு பிதுர்காரியங்கள் செய்யாத குடும்பங்களின் சந்ததிகளிலே தீய குழந்தைகள் பிறப்பார்கள்.

## தெய்வம்

தேவர்களுக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் முன்னோர்களால் தெடர்ந்து வழிபடப்பட்டு வந்த குலதெய்வத்தையும் வழிபடுவது முக்கியமான கடமையாகும்.

## விருந்து

விருந்து என்ற சொல்லுக்கு புதுமை என்றும் ஒரு பொருள் உண்டு. விருந்தினர் இருவகையினர் பண்டு தொடர்பினால் அறிவித்து வருபவர், அறிவிக்காமல் (பழக்கமே இல்லாதவன்) வருபவர் என்ற இரண்டு வகையாக விருந்து இருக்கும் என்று பரிமேலழகர் உரை கூறுகிறார். ஒரு துறவி அறிவிக்காமல் வந்தாலும் அவருக்கு விருந்து கொடுக்க வேண்டியது இல்லறத்தானின் கடமை.

"விருந்து புறத்ததா தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (Kalyanasundaranar, 2012)

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" (Avvai Duraisamy pillai, 2010)

ஒக்கல்: ஒக்கல் என்ற சொல்லுக்கு உறவினர்கள் என்று பொருள் அந்த உறவினர்களுக்கு ஒரு இல்லறத்தான் கடமையாற்ற வேண்டும. தன்னைத்தானே ஓம்பிக் கொள்வது அறமாகுமா? என்ற வினாவுக்கு எல்லா அறங்களும் தன்னைக் கொண்டு செய்ய வேண்டியிருப்பதலால் தன்னை ஓம்புதலும் அறமாகும் (Kalyanasundaranar, 2012). அட்டவணை 1-யில் பின்வருமாறு

அட்டவணை 1. இல்லறத்தான் செய்ய வேண்டிய கடமைகள்

| கடமை செய்ய வேண்டியவர் | கடமைகள் |
|---|---|
| கற்கும் பருவத்தான் (பிரம்மச்சர்யன்) | கற்கும் பருவத்தினன் யாராக இருந்தாலும் அவனுக்கு கற்கவும் விரதம் காக்கவும் உணவு முதலியன கொடுத்து உதவுதல் வேண்டும். |
| ஓயும் பருவம் | இல்லறக் கடமையாற்றி காடு நோக்கிச் சென்றவாகளுக்கு அவர்கள் தவம் செய்வதற்கு உதவுதல் வேண்டும். |
| துறவி | துறவிகளுக்கு உணவு முதலியன கொடுத்து காத்தல் கடமையாகும். |
| துறந்தார் | காக்கவேண்டியவர்களால் கைவிடப்பட்டவர்களுக்கும் உணவு முதலியன கொடுத்துக் காத்தல் கடமையாகம். |
| துவ்வாதவர் | வறுமையுற்று துன்புறுபவர்களுக்கு கடமையாற்றிக் காக்க வேண்டும். |
| இறந்தார் | அறிமுகம் இல்லாத ஒருவராக இருந்தாலும் அவர் நம் வீட்டருகே இறந்து கிடப்பாராயின் அவருக்கு நீர்க்கடன் ஆற்ற வேண்டும். |
| தென்புலத்தார் | தென்திசையில் இருக்கும் தென்புலத்தாருக்கு கடமையாற்றி தங்கள் முன்னோர்களுக்கு அவை சென்று சேருமாறு நன்றிக்கடனாக பிதுர் காரியங்களை தவறாது செய்தல் கடமையாகும். |
| தெய்வம் | தேவர்களையும் குலதெய்வத்தையும் விடுபடாது வழிபடுதல் வேண்டும். |
| விருந்து | இருவகை விருந்தினர்களை உபசரித்தல் என்பது கடமையாகும் |
| ஒக்கல் | உறவினர்கள் மகிழ்ந்திருக்க அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஆற்றுதல் வேண்டும். |
| தான் | மற்றக்கடமைகளை தொய்வின்றி செய்ய வேண்டுமானால் தான் உடல்பலம் மனோபலத்துடன் இருப்பது அவசியம் என்பதனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும் அறமாகும். |

## பழிக்கு அஞ்சிவரும் வாழ்க்கையின் சிறப்பு

இல்வாழ்வான் என்பான் மேற்கூறப்பட்ட பதினொரு கடமைகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது அதற்கானப் பொருளை பழியஞ்சி தேடவேண்டும். பழிபாவம் என்ற இரு சொற்களை

நம்முன்னோர்கள் கூறியுள்ளார்கள் பழி என்பதற்கு உலகம் தூற்றும்படியாக வாழ்வது ஆகும். பாவம் என்பது நம் ஆத்மாவின் முன்ஜென்மப் பதிவு என்றும் கூறுவர். எனவே நாம் தேடுகின்ற பொருள் பழிக்கு அஞ்சி நேர்மையானதாக இருக்க வேண்டும். அப்படி தேடிப் பெறப்பட்ட பொருளைப்பகுத்துக் கொடுத்து வாழ்ந்தால் அவனுடைய தலைமுறை தொடர்ந்து செழித்திருக்கும். பழியோடு தேடிப்பொருளை பகுத்துக் கொடுப்பானானால் அச்செயலுக்கான புண்ணியம் முழுவதும் பொருள் யாருக்குரியதோ அவனுக்குச் சென்றுவிடும். பாவம் மட்டுமே இவனுக்கு எஞ்சும். அதோடு மட்டுமல்லாமல் அவன் சந்ததிகள் தழைத்தோங்காமல் இடையிலேயே நின்றுவிடும் என்பதை பரிமேலழகர் பின்வருமாறுகூறுகிறார். அறம் பொருளுடையார் மேலும் பாவம் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சுமாதலின் பழியஞ்சி என்கிறார்.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"- (Kalyanasundaranar, 2012)

## இல்வாழ்வானின் பெருமைகள்

ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானாயின் அவன் அறத்திற்கு புறமாகிய நெறியில் போய்ப் பெறும் பயன் யாது? ஒரு இல்லறத்தான் மேற்சொன்னபடி இல்லறக்கடமைகளை ஆற்றுகிறான் என்றால் இரண்டு பயன் உண்டு. இம்மைப்பயன் புகழ் கிடைக்கும். மறுமைப் பயன் சொர்க்கம் கிடைக்கும் என்கிறார் பரிமேலழகர். மோட்சம் வேறு சொர்க்கம் வேறு, மோட்சம் என்பது இறையடியைச் சேர்வது சொர்க்கம். இன்னொரு உலகத்தில் வசதியாக தேவர்களோடு வாழ்வது மோட்சம். ஞானிகள் எல்லாம் மோட்சத்திலே சேர்வார்கள். முற்றும் துறக்காத நிலையிலே முயற்சித்துக் கொண்டிருக்கும் போது இறப்பானாயின் அவன் சொர்க்கத்தில் சென்று சேர்வான். எல்லவற்றையும் அனுபவித்து அறம் செய்பவனும் சொர்க்கம் சேர்கிறான் எல்லாவற்றையும் விட்டு கடும் தவம் செய்தவனும் (துறவு நோக்கி) முயல்வாரும் சொர்க்கத்துக்குத்தான் போகிறான். எனவே துறவு நோக்கி முயல்பவனை விட இல்லறத்தான் சிறந்தவனாகிறான்.

துறவியை துறவியாக வைத்திருப்பவன் இல்வாழ்வான். இல்வாழ்வான் துறவியை துறவின்படி நிற்க துணை செய்யவேண்டும். துறவியை துறவில் செலுத்தி தானும் நிற்கும் இவன் அவர்களைவிட சிறந்தவன். இல்லறத்தான் தன்துன்பத்தையும் தாங்கி துறவிக்குரிய துன்பத்தையும் நீக்குகிறான். துறவி தன் துன்பத்தை நீக்குகிறான் என்பதனால் இல்லறத்தான் தவம் பெரியதாகக் கொள்ளப்படுகிறது.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"

இரண்டு அறங்களுள் சிறப்பாக அறம் என்று சொல்லப்படுவது இல்வாழ்க்கையேயாகும் துறவறமும் பழிப்பு நிலையிலிருந்து நீங்கினால் சிறப்புடையது (Kalyanasundaranar, 2012).

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

இல்லறத்தோடு வானுயற வாழ்பவன் தேவர்களுக்குள் ஒருவனாக வைக்கப்படுவது உறுதி என்று மறுமைப்பயன் கூறப்பட்டது (Kalyanasundaranar, 2012).

## முடிவுரை

தமிழர்கள் மிகச்சிறந்த பண்பட்ட வாழ்வியலை வாழ்ந்ததனாலேயே மிகச்சிறந்த இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தமிழர் பண்பாட்டை சான்றகக் காட்டி உலக மக்களுக்கு உயர்ந்த அறத்தை உணர்த்த திருவள்ளுவர் திருக்குறளை எழுதியுள்ளார். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருமையுடையவர்கள் என்பதை இல்வாழ்வானின் கடமைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. வாழ்வியலை வகுத்து முறைப்படி வாழ்ந்துள்ள பண்பாட்டுச் சிறப்பை எடுத்துரைக்கிறது. மாற்றங்கள் தவிர்க்க இயலாதது. இன்றைய காலக்கட்டங்களில் அனைவரும் கல்வி கற்கும் உரிமை,

விருந்தோம்பல், தெய்வவழிபாடு, சடங்குகள் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பண்பாட்டு மாற்றங்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு நிகழ்வது தவிர்க்க இயலாததாக உள்ளன.

## References

Avvai Duraisamy pillai, S. (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Bharathiyar, (1992) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Iraiyarasan, P. (1993) Thamizhar Nagarigam Varalaru, Poombuhar Pathippagam, Chennai, India.

Kalyanasundaranar, T.V. (2012) Thirukkural, Punitha Nilayam, Chennai, India.

Subash Chandra Bose, S. (2016) Tholkappiyam Porulathikaram, New Century book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License